# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2138/6 - 2019 අගෝස්තු මස 26 වැනි සඳුදා - 2019.08.26**

*2138/6 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 26 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபை

## மாகாண சபை அறிவித்தல்கள்

இணைப்பு இல. 01.

**வடமத்திய மாகாண சபை**

*2018.08.29 ஆந் திகதியுள்ள இல.2086/15 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள சட்டங்கள் திருத்தம் செய்தல்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இணைவிதி) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (252 ஆவது அத்தியாயம்), மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 289(1) ஆம் பிரிவின் விடயதான அமைச்சருக்குரிய அதிகாரத்தின் பிரகாரம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தின் 184 (1) (இ), (உ), (ஊ) ஆகிய உபபிரிவுகளின் கீழ் விடயதான அமைச்சருக்கு உள்ள அதிகாரத்தின் பிரகாரம் வடமத்திய மாகாண கௌரவ ஆளுநராகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய, 2018.08.29 ஆந் திகதிய மற்றும் 2086/15 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விதி கீழேயுள்ளவாறு திருத்தப்பட்டு செயற்படுத்த கட்டளைகள் இத்தால் வெளியிடப்படும்.*

*சரத் ஏகநாயக்க,*
*ஆளுநர்,*
*வடமத்திய மாகாணம்.*

*ஆளுநர் அலுவலகம்,*
*வடமத்திய மாகாணம்,*
*2019, மாச்சு 28.*


1A - PG 4587 — 20 (2019/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1. மாநகர சபை நகர பிதாக்கள் மற்றும் பிரதி நகர பிதாக்களுக்கான உபசாரக் கொடுப்பனவாக மற்றும் உபசாரச் செலவினம் -

இப்போதுள்ள ஒழுங்குமுறைகள்

3.I மாநகர சபை நகர பிதாக்களுக்கு உபசாரக் கொடுப்பனவாக மாதாந்தம் 3,000 ரூபா பெறுமதியான கொடுப்பனவுக்காக சபை நிதியிலிருந்து செலவிட முடியும். அதற்கான செலவு விடயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3.II மாநகர சபை பிரதி நகர பிதாக்களுக்கு உபசாரக் கொடுப்பனவாக மாதாந்தம் 750.00 ரூபா பெறுமதியான கொடுப்பனவுக்காக சபை நிதியிலிருந்து செலவிட முடியும். அதற்கான செலவு விடயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3.III மாநகர சபைக் கூட்டம் மற்றும் கமிட்டிக் கூட்டங்களுக்கு கலந்துகொள்ளும் அங்கத்தவர்களுக்கு உபசாரம் செய்வதற்காக கலந்துகொள்ளும் ஒரு அங்கத்தவருக்கு ஒரு கூட்டத்திற்காக 100.00 ரூபாவுக்கு அதிகரிக்காமல் சபை நிதியிலிருந்து செலவு செய்ய முடியும்.

திருத்தப்படவேண்டிய விதம் :

3.I மாநகர சபை நகரபிதாக்களுக்கு உபசாரக் கொடுப்பனவாக மாதாந்தம் 5000,000 ரூபாவுக்கு அதிகரிக்காமல் சபை நிதியிலிருந்து செலவிட முடியும்.

3.II மாநகர சபை பிரதி நகர பிதாக்களுக்கு உபசாரக் கொடுப்பனவாக மாதாந்தம் 3000.00 ரூபாவுக்கு அதிகரிக்காமல் சபை நிதியிலிருந்து செலவிட முடியும்.

3.III மாநகர சபைக் கூட்டங்கள் மற்றும் கமிட்டிக் கூட்டங்களுக்கு கலந்துகொள்ளும் அங்கத்தவர்களுக்கு ஒரு கூட்டத்திற்காக 200.00 ரூபாவுக்கு அதிகரிக்காமல் சபை நிதியிலிருந்து செலவு செய்ய முடியும்.

2. பிரதேசசபை கௌரவ தலைவர்கள் மற்றும் அங்கத்தர்களுக்கான உபசாரக் கொடுப்பனவு மற்றும் உபசாரச் செலவினம்

இப்போது காணப்படும் ஒழுங்கு முறைகள்

3.I பிரதேச சபை தலைவர்களுக்கு உபசாரக் கொடுப்பனவாக மாதாந்தம் 2000.00 ரூபா கொடுப்பனவு சபை நிதியிலிருந்து செலவிட முடியும். அதற்கான செலவு விடயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3.II பிரதேச சபையின் கூட்டங்கள் மற்றும் கமிட்டிக் கூட்டங்களுக்கு கலந்துகொள்ளும் அங்கத்தவர்களுக்கு உபசரித்தலுக்காக கலந்துகொள்ளும் ஒரு அங்கத்தவருக்கு ஒரு கூட்டத்திற்கு 100.00 ரூபாவுக்கு மேற்படாமல் சபை நிதியிலிருந்து செலவிட முடியும்.

திருத்தப்பட வேண்டிய விதம் :

3.I பிரதேச சபைத் தலைவர்களுக்கு உபசாரக் கொடுப்பனவாக மாதாந்தம் 4000.00 ரூபா கொடுப்பனவு சபை நிதியிலிருந்து செலவிட முடியும்.

3.II பிரதேச சபையின் கூட்டங்கள் மற்றும் கமிட்டிக் கூட்டங்களுக்கு கலந்துகொள்ளும் ஒரு அங்கத்தவருக்கு ஒரு கூட்டத்திற்கு 200.00 ரூபாவுக்கு மேற்படாமல் சபை நிதியிலிருந்து செலவிட முடியும்.

3. பிரதேச சபை தலைவருக்கு தனிப்பட்ட ஊழியர் குழாம் கொடுப்பனவு :

இப்போது காணப்படும் ஒழுங்கு முறைகள் :

6.I பிரதேச சபை தலைவருக்கு தனியார் செலயலாளரொருவரை நியமிக்க முடியுமானதோடு, அவருக்கான கொடுப்பனவு 7500.00 ரூபாவுக்கு மேற்படாமல் சபை நிதியிலிருந்து செலவிட முடியும்.

திருத்தப்பட வேண்டிய விதம் :

6.I பிரதேச சபைத் தலைவருக்கு தனியார் செலயலாளரொருவரை நியமிக்க முடியுமானதோடு, தனியார் செயலாளருக்கான கொடுப்பனவாக மாதாந்தம் 12500.00 ரூபாவுக்கு மேற்படாமல் சபை நிதியிலிருந்து செலவிட முடியும்.

09-729

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.